# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

லூர்து மேரி, மேரி செசரியா, ரூபெல்லா மேரி, ஜோஸ்பிட்டா மேரி, ஜெரின் மேரி, லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜான்சி மேரி, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - தோகமலை, - வித்யா மேரி, மரிய சூசை ரூபி- தூத்துக்குடி, ஜார்லத் புஷ்பா, அனன்சியா மேரி, பவுலின் மேரி, ஸ்டெல்லா ரோஸ்- திண்டுக்கல், பென்சிட்டா, அமல செல்வி, மிரியம், புஷ்பா மேரி, ரஞ்சிதம், லோரா மேரி, லீமா, தீபா

### பொதுநிலையினர்

பிரான்சிஸ் பேசில், அனிருத் ஜோஸ்வா, ஜேடன், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, மேரி மார்கிரேட், நான்சி பியூலா, செலின் மேரி, பாத்திமா, கிளாரா லூர்துமேரி, மிக்கேல் சாமி - கோயமுத்தூர், மேரி - இளையரசனேந்தல், மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, லீலாவதி, *இருதய விஜில்லா* - திண்டுக்கல், ஜோஸ்வா சந்தோஷ், கெர்மன், கரோலின் பிலலேந்திரன், அடைக்கலமேரி சூரிய அன்புவளன், ஜோசப் சக்கர் ஜானி

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



அருட்சகோதரி. மரிய சூசை ரூபி-தூத்துக்குடி
திருமதி. இருதய விஜில்லா - திண்டுக்கல்

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. M. Antony Shaji OSM.






# வியாகுல அன்னை


## பதிப்பாசிரியர் பக்கம்



அன்பு வாசகர்களே! அன்னை மரியின் பக்தர்களே! ஆகட்டும் இதழின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி வியாகுல அன்னையின் விழாவினை கொண்டாடுகின்றோம். திருஅவையின் தொடக்க காலத்தில் இருந்து வியாகுல அன்னையின் மேல் இதயபூர்வமான பக்தி தொடர்ந்து வந்திருக்கின்றது. இப்போது நாம் குறிப்பிடுவது போல அன்னையின் வியாகுலங்கள் ஏழு எனக் குறிப்பிடும் வழக்கம் 13-ஆம் நூற்றாண்டில், மரியின் ஊழியர் சபையின் ஆன்மீகத்திலிருந்து தான் வருகிறது, அதற்கு முன்னாள் மீட்பின் மறைபொருளோடு ஒன்றாக கலந்ததாக அன்னையின் வியாகுலம் கருதப்பட்டு வந்தது. மனுகுல மீட்பில் இறைவனோடு மிக நெருக்கமாக இருந்து கொடூரமான துன்பங்கள் வந்த போதும் மாறா பிரமாணிக்கத்துடன் ஒத்துழைத்த மரியாவை நன்றியோடு நினைத்து அவரை “வியாகுல அன்னை” ஆக போற்றினர் ஆதி கிறிஸ்தவர்கள். இதனால் இறைவனின் மீட்பு செயலோடு இணைந்து செயல்படும்போது நாம் அனுபவிக்கும் மன வேதனைகளை ‘வியாக்குலங்கள்’ என்று அழைக்கும் பழக்கம் ஏற்பட்டது. எவ்வகையான எதிர்ப்பிலும் துன்பத்திலும்




## உள்ளே




| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| அன்னை மரியாவின் திருப்பயணங்கள் | 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| மரியாளின் பாடல் | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

கூட மீட்கும் இறை திருவுளத்திற்கு பிரமாணிக்கமாய் இருக்கும் நிலைப்பாட்டிற்கு சிலுவையில் தொங்கும் இயேசு அடையாளமாக இருக்கிறார். இயேசுவின் இத்தகைய கீழ்ப்படிதலால் நாம் மீட்பு பெறுகின்றோம். எனவே கிறிஸ்துவத்தில் 'சிலுவை' மீட்பின் அடையாளமாக இருந்து வருகிறது. அதே போல் இறைவனின் மீட்கும் திருவுளத்தை ஏற்று, அது எதிர்பார்க்கும் பதிலை அளிப்பதற்காக துன்பத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும், அன்னை மரியாள் உறுதியாக இருந்தார். தான் மட்டுமின்றி அனைத்து மாந்தரும் விடுதலை பெற மனிதர் கொள்ள வேண்டிய ஈடுபாட்டின் அடையாளமாக சிலுவையின் அடியில் நிற்கும் மரியா இருக்கின்றார். அவருடைய தனிப்பட்ட வாழ்வில் இறைத் திருஉளத்தை முழுவதுமாக ஏற்று 'ஆகட்டும்' என பணிந்து அதற்கு பிரமாணிக்கமாக இருந்தார். மீட்பரின் வாழ்விலும் வாழ்வு பலியிலும் உடன் இருந்து எண்ணற்ற துயரங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் முழுமையாக ஒத்துழைத்தார். இதனால் மாந்தர் அனைவரின் மீட்பில் பொதுவாகவும், தனிப்பட்ட முறையிலும் ஈடுபாடு கொள்ளும் தனிச்சிறந்த பொறுப்பு வாய்ந்த பணியை இயேசுவிடம் இருந்து பெற்றார். இதனால் தான் 'வியாகுல அன்னை' என்ற பெயரில் அன்னை இன்றும் போற்றப்படுகிறார்.



நம்பிக்கையாளர்கள் ஆகிய நாம் துன்பத்தினால் தூய்மை அடைந்து இறை விசுவாசத்தில் ஆளப்படுகிறோம். மரியா தனது அனைத்து துன்பங்களிலும் மீட்பு திட்டத்தை முன்னிட்டு இறை உறவில் இணைந்திருந்தார். ஆண்டவரே அவரது ஆறுதல். நமது துன்ப வேளைகளில் ஆண்டவரில் இளைப்பாறுதல் தேடுவோம். "பெருசுமை சுமந்து சோர்ந்து இருப்பவர்களை எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன், (மத்தேயு 11:28) என்கிறார் இயேசு. மரியாளை போன்று நாம் ஆண்டவரின் திட்டத்தை நம் வாழ்வில் ஏற்று எதிர்வரும் துன்பங்களில் அவரது ஆறுதலை நாடி நம்பிக்கையில் நடைபோடுவோம். நாம் துன்பத்தில் துவண்டு விடாமல், துணிவோடு போராடி, இறைவன் தரும் மகிமையில் பங்கெடுக்க நமக்கு எல்லாம் ஒரு தலைச்சிறந்த முன்மாதிரியாக வியாகுல அன்னை திகழ்கின்றார், அவர் பாதையில் பயணிப்போம்.





கேட்டேன் அதற்காக தினமும் ஜெபித்தேன் தினமும் திருப்பலிக்கு செல்லக்கூடிய மகளாக ஆண்டவர் என்னை மாற்றினார். ஒருநாள் ஜெபிக்கும் போது என் அம்மா காசு கொஞ்சம் துணியில் முடித்து வைப்பார் அந்த நம்பிக்கையை ஆண்டவர் எனக்கு அன்று வெளிப்படுத்தினார் நானும் அப்பொழுதே அவ்வாறு செய்தேன் என் மகனுக்கு நல்ல வேலை கிடைத்தது. ஐவு ஐடி கம்பெனியில் உயர்ந்த ஸ்தானத்தில் வேலை கிடைத்துள்ளது ஆண்டவருக்கு நன்றி! மரியே வாழ்க.

**மேரி ஜோஸ்பின்: அயினாவரம்**

என் மகளுக்கு திருமணமாகி 3 ஆண்டுகளுக்கு பிறகு ஒரு குழந்தை பிறந்துள்ளது. அவனுக்கு ஐந்து மாதங்கள் இருக்கும் போது மூச்சுத் திணறல் மற்றும் சளி பிரச்சனை இருந்தது. ஒரு நாள் மருத்துவரிடம் சென்றோம். அவர் குழந்தைக்கு சிறுநீரகம் பரிசோதனை செய்ய வேண்டும் என்றார். ஆனால் குழந்தைக்கு சிறுநீர் வரவில்லை. ஆதலால் வீட்டுக்கு சென்று அதன் பிறகு எடுத்துக் கொண்டு வாருங்கள் என்றார். இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு அன்னையிடம் நான் வேண்டி மற்றாடினேன், பின்பு மகனுக்கு சிறுநீர் வந்தது. அதை பரிசோதனை செய்தபோது, நான் ஆண்டவரிடம் இனிமேல் சர்க்கரை உட்கொள்ள மாட்டேன் என்று ஒரு பொருத்தனை செய்தேன். அதன் பிறகு குழந்தை நன்றாக இருந்தான். இரண்டு வயது ஆன பிறகு திரும்பவும் அந்தப் பிரச்சினை ஆரம்பித்தது, அதனால் மார்பு பகுதியை எக்ஸ்ரே எடுக்க வேண்டும் என்று கூறினார்கள். நான் முன்பு கூறிய பொருத்தனையை பின்பற்றாமல் விட்டுவிட்டேன். அதனால் இப்பிரச்சினை இப்போது வந்திருக்கிறது என்று நினைத்து மீண்டும் அந்தப் பொறுத்தனையை பின்பற்றுகிறேன். இப்பொழுது மகன் நன்றாக இருக்கிறான். இயேசுவுக்கே நன்றி! மரியே வாழ்க!

**குழந்தை வரம் வேண்டி ஜீவ மாதாவிடம் ஜெபம்**

புனித ஜீவ மாதாவே! குழந்தை வரம் பெற்றுத் தரும் அன்னையே, குழந்தை இல்லாமல் தவிக்கும் எங்கள் மீதும் அனைத்து தம்பதியர் மீதும் உம் திருமகன் இரக்கம் கொண்டு குழந்தை செல்வம் அருள பரிந்து பேசியருளும்.

வல்லமை மிக்க உமது பரிந்துரையின் மீது நம்பிக்கை வைத்து மன்றாடும் எங்களை கண்ணோக்கியருளும்.

உம் திருமகனால் ஆகாதது ஒன்றுமில்லை. சாரா, ராக்கேல், அன்னா, எலிசபெத் ஆகியோருக்கு முதிர்ந்த வயதிலும், கருவுற இயலா நிலையிலும் மழலை செல்வம் தந்து மகிழ்வித்த இறைவன் எங்களுக்கும் குழந்தை வரம் தந்து எம் குடும்பத்தை மகிழ்ச்சியால் நிரப்பிட எங்களுக்காக மன்றாடியருளும் தாயே! ஆமென்.



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்பணி. லீபன் டேவிட். மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**ரிச்சர்டு: சோழிங்கநல்லூர்**

நான் சோழிங்கநல்லூர் பங்கு சேர்ந்தவர். என் பாட்டி பெயர் ரோஸி, அவர்களுக்கு மூன்று வாரங்களுக்கு முன்பு நுரையீரல் பிரச்சனை ஏற்பட்டு சுவாசிக்க மிகவும் சிரமப்பட்டார்கள். அவரை நான் உடனடியாக மருத்துவமனையில் அனுமதித்தேன். அங்கு மருத்துவர் என் பாட்டியை சோதித்து, அவருக்கு ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் சராசரி அளவினை விட மிகவும் அதிகமாக உள்ளது என்றார்கள். எனவே அவசர பிரிவில் மூன்று நாட்கள் வைத்திருந்தனர். பிறகு சாதாரண அறைக்கு மாற்றம் செய்யப்பட்டார். ஆனால் என் பாட்டிக்கு மறுபடியும் மூச்சு திணறல் ஏற்பட்டது, மறுபடியும் அவசர சிகிச்சை பிரிவுக்கு கொண்டு சென்றார்கள். அப்பொழுது அந்நேரமே நான் ஜீவ மாதாவிடம் வேண்டிக் கொண்டேன். என் பாட்டியை குணப்படுத்திக் கொடுங்கள், நான் இந்த இடத்தில் சாட்சியாக நிற்பேன் என்றும், சாட்சி கூறுவேன் என்றும், வேண்டிக் கொண்டேன். அடுத்த நாளே அவர் சாதாரண அறைக்கு மாற்றப்பட்டார். வெள்ளை அணுக்களின் அளவு குறைந்து என் பாட்டியை சாதாரண அறைக்கு மாற்றினார்கள். மூன்று நாட்கள் கழிந்து என் பாட்டி குணமடைந்து நன்றாக வீடு திரும்பினார். நான் வேண்டிக் கொண்ட புனித பெனடிக், புனித அந்தோணியார் மற்றும் எல்லா புனிதர்களுக்கும் நன்றி. இயேசுவுக்கு நன்றி! மரியே வாழ்க!

**எஸ்தர்: வெட்டுவாங்கனி**

நான் வெட்டுவான்கனி பங்கை சேர்ந்தவர். நான் 2000 முதல் இங்கு வந்து கொண்டிருக்கிறேன் ஜீவத்தாய் உண்மையாகவே அவர் ஜீவனுள்ள தாய் அவர்கள் நிறைய பரிந்துரை செய்கிறார்கள் அதில் நான் நிறைய மன்றாட்டை வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் மரியன்னைக்காக போர் என்று ஜெப குழுவில் இருக்கின்றேன். அன்னை மரியாளின் பரிந்துரையாலும் வழிநடத்துதலும் வேறு மாதிரி இருந்தது. நான் பிறருக்காக ஜெபிப்பது ஒருத்தல் இருப்பது உபவாசம் இருப்பது என அன்னை மரியாள் ஆண்டவருக்குள் என்னை வழிநடத்தி வந்தார். நான் ஆண்டவரிடம் என் மகனுக்காக ஒரு வேலை வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்கவில்லை உன்னுடைய திருவிளத்தின் படியே என் குடும்பத்தை வழிநடத்தும் என்று





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



ஓர் ஊரில், ஒரு மிகப்பெரிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் பெரிய பெரிய மரங்கள், செடிகள், கொடிகள் என நிறைய இருந்தன. மிகவும் பசுமையாக இருந்த காரணத்தினால் அங்கு நிறைய பறவைகள், குருவிகள், பூச்சிகள் எல்லாம் வாழ்ந்து வந்தன. ஆனால் தோட்டத்தின் உரிமையாளர் ஒருபோதும் இந்த உயிரினங்களை தொந்தரவு செய்வதில்லை. அந்த தோட்டத்தில் ஒரு பாட்டில் இருந்தது. அந்த பாட்டிலின் உள்புறத்தின் ஒருபுறம் முழுவதும் சிவப்பு எறும்புகள் அங்கிருந்த தீனியை சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அதே பாட்டிலின் உட்புறத்தின் மற்றொருபுறத்தில் கருப்பு எறும்புகள் தீனியை சாப்பிட்டுக் கொண்டிருந்தன. ஒரு நாள் அந்த தோட்டத்திற்கு வந்த ஒரு இளைஞன் இதை பார்த்தான். கருப்பு எறும்புகளும் சிவப்பு எறும்புகளும் ஒரே பாட்டிலில் இருக்கும் உணவை சாப்பிட்டுக் கொண்டிருப்பதை பார்த்தான். ஒரு ஓரமாக இருந்த அந்த பாட்டிலின் மூடியை எடுத்து அந்த பாட்டிலை அடைத்து நன்றாக குலுக்கினான், உடனே கருப்பு எறும்புகளும் சிவப்பு எறும்புகளும் அங்கு இங்குமாக ஓட துவங்கின. கருப்பு எறும்புகளுக்கு சிவப்பு எறும்புகள் எதிரிகளாக மாறியது. சிவப்பு எறும்புகளுக்கு கருப்பு எறும்புகள் எதிரிகளாக மாறியது. மாறி மாறி சண்டை போட்டு அனைத்தும் தன்னுடைய உயிரை மாய்த்தது. ஆனால் உண்மையில் பார்த்தால் கருப்பு எறும்புக்கு சிவப்பு எறும்பு எதிரி அல்ல, சிவப்பு எறும்புக்கு கருப்பு எறும்பு எதிரி அல்ல. மாறாக அந்த பாட்டிலை நன்றாக குலுக்கிவிட்ட அந்த இளைஞன் தான் இருவருக்கும் எதிரி.

இந்த உலகமும் இப்படிதான் இயங்கி கொண்டிருக்கின்றன. சாதி, மதம், இனம் என்று மனிதர்களை பிரிப்பவர்கள் அதிகம். தங்களுடைய சுயநலனுக்காக வேற்றுமைகளை விதைத்து ஆதாயத்தை தேடிக்கொள்கிறார்கள், இவர்களின் மாயவலையில் சிக்கிகொள்ளாமல் இருக்க நாம் மரியாளின் துணையை நாடவேண்டும். அன்னை மரியாள் உலக அமைதிக்காக, நீதிக்காக எந்த சலனமும் இல்லாமல் சிலுவையின் அடியில் நின்றார் (யோவான் 19:25). அன்னையை போல் வேற்றுமையை துறந்து, அநீதிகளுக்கு விடை எழுதும் அருள் நாடுவோம்.

# அன்னை மரியாவின் திருப்பயணங்கள்

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

### பயணம் இரண்டு

**தொடக்கவுரை**

இன்று உலகில் மக்கள் பயணம் செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றனர். இன்ப, துன்ப நிகழ்வுகளில் பங்கேற்க, தனியாக, குடும்பமாக, நண்பர் குழுவோடு பயணிக்கின்றனர். அதிகம் பணம் செலவழித்து உயர்தர பேருந்துகளில், இரயில்களில் பயணித்தும் வருகின்றனர். ஒரே தொழில், ஒரே இடம் இவற்றை விட்டுவிட்டு, புதிய சூழலுக்குச் சென்று தம்மைப் புதுப்பித்து வருகின்றனர். திருத்தலங்களுக்கும் செல்கின்றனர். நாம் சார்ந்திருக்கும் திருஅவை பயணம் செய்யும் திருஅவை. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் அதில் பயணம் செய்கின்றோம். நாம் திருமுழுக்கு பெற்ற நாளிலிருந்து கிறிஸ்துவில் முழுமையடைய பயணித்துக் கொண்டேயிருக்கின்றோம். நிலையான இல்லம் நமக்கு இங்கு இல்லை. வானகமே நமது தாய்நாடு என்ற உறுதிப்பாட்டுடன் புதிய எருசலேமை நோக்கி ஆவலுடன் நமது வாழ்வுப் பயணத்தை நகர்த்துகின்றோம். எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் திருஅவையுடன் இணைந்து செல்லும் நாம் ஒவ்வொரு நாளும் இறையன்பிலும் பிறரன்பிலும் வளர்ந்து கொண்டே இருப்போம். இறையாட்சியின் விழுமியங்கள் இப்பூமியில் விதைக்கப்பட்டு கொண்டே இருக்கட்டும். அதன் பலனை ஜூபிலி ஆண்டின் இறுதியில் அறுவடை செய்வோம். அது ஆன்மிக அறுவடை தரும் மகிழ்வில் திளைப்போம். உலகம் தர முடியாத அமைதியில் என்றும் நிலைத்திருப்போம்.

எதிர்நோக்கும் திருப்பயணிகளுள் முதன்மையானவர் புனித கன்னி மரியா. அவரின் திருப்பயணங்களை சிந்தித்தும் தியானித்தும் வருகின்றோம். கடந்த மாதம் அவரின் முதல் பயணத்தைப் பார்த்தோம் சிந்தித்தோம். வானதூதர் கொண்டு வந்த மீட்பரின் பிறப்புச் செய்தியை அறிந்ததும் தனது உறவினர் எலிசபெத்தைச் சந்திக்கச் சென்ற அவரின் பயணத்தை விரிவாக அறிந்தோம். இக்கட்டுரையில் அவரின் இரண்டாவது பயணமான யூதேய நாட்டிலிருந்து கலிலேய நாட்டிற்குச் சென்ற அவரோடு நாமும் பயணிப்போம். இதைப் பற்றிய விவரங்கள் நற்செய்தியில் கிடைக்காவிடினும் நாம் நமது அன்னையின் பயணம் எவ்வாறு இருந்திருக்கும் என்று கற்பனை செய்யலாம். நமது ஆன்மிக வாழ்வுக்கும், இரக்கச் செயல்களுக்கும் எந்தெந்த கற்பனையும், விளக்கங்களும், முன்மாதிரிகைகளும் உதவுமோ அவை அனைத்தையும் நமதாக்குவோம்.

**தம் வீடு திரும்பிய மரியா**





மேலும் ஒரு படி மேலே சென்று அழகு கூட்ட (ஏசாயா 53:8) "அவருக்கு நேர்ந்ததை பற்றி அக்கறை கொண்டவர் யார்? என்ற வினாவை இவ்வாறு வார்த்தை மூலம் கொடுத்து திருப்பாடல் 2:7 ஆம் இறைவார்த்தையின் மூலம் ஆண்டவர் ஆணை இட்டு உரைத்ததை நான் இங்கு அறிவிக்கின்றேன் என்று பதில் தருகிறார். இயேசுவின் தெய்வீக தன்மையும் மனித தன்மையும் இணைந்து வெளிப்படுத்தி மீக்கா 5:3 இறை வார்த்தையை கையாளுகிறார் "நீயோ எப்பத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களில் மிகச்சிறியதாய் இருக்கின்றாய் ஆயினும் இஸ்ரயேல்லை என் சார்பாக ஆளப்போகின்றவர் உன்னில் இருந்தே தோன்றுவார் அவர் தோன்றும் வழி மரபு ஊழி ஊழி காலமாய் உள்ளதாகும்." இந்த இறைவார்த்தை புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்படுவதை குறிப்பிட்டு அதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள மீக்கா 5:1 இறை வார்த்தையையும் இணைக்கின்றான், 'அறம் சூழ்நகரில் வாழும் மக்கள்! என்ற இறைவார்த்தையிலும் கிறிஸ்துவின் தெய்வீக தன்மையின் மகத்துவத்தையும் மனிதத் தன்மையின் முக்கியத்துவதத்தையும் தெளிவுபடுத்துகிறார். இந்த எல்லா வார்த்தையிலும் தாவீதின் நகரம் வரலாற்று சான்றுக்கு விடை அளிப்பதாக அமைந்துள்ளது. லூக்கா 2:11 இல் காணும், "இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார், தாவீதின் நகரின் முக்கியத்துவத்தை இயேசுவின் தெய்வீக தன்மையோடும் மனித தன்மையோடும் இணைந்து தருகிறார்.

மேற்கண்ட எல்லா இறை வார்த்தைகள் மூலமாக புனித சீரில் இயேசுவின் மனித தன்மையின் முக்கியத்துவத்தில் பங்கெடுக்கும் வரலாற்று மனிதர்களை வரிசைப்படுத்தி பார்க்கிறார். தாவீது அரசரின் வரலாற்றை யூதா வரலாறு வரை சென்று பார்த்து நமக்கு வெளிப்படுத்துகிறார். இதற்கெல்லாம் மூல காரணம் அன்னை மரியா என்று குறிப்பிடுகிறார். அதாவது இயேசுவின் மனித தன்மைக்கு அன்னை மரியாவின் வரலாற்று நம்பிக்கையோடு இணைந்து தருகிறார். அன்னை மரியாவையும் தாவீதின் குடும்பத்தாரோடு இணைத்து தருகிறார். தொடக்க நூல் 49:9 'யூதா! நீ ஒரு சிங்கக்குட்டி' என்ற பழைய ஏற்பாட்டு இறைவார்த்தையை மேற்கோள் காட்டி இயேசுவின் அரசாட்சியின் தெய்வீக தன்மையும் மனிதத் தன்மையும் முழுமையாக நிறைந்திருப்பதை நினைத்து பெருமிதம் கொள்கிறார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
சென்னை

23



சென்ற மாத இதழில் அன்னை மரியாவின் "கன்னிமை அழகை" எருசலேமின் அழகோடு புனித சிரில் ஒற்றுமைப்படுத்தி, அழகு படுத்தியதை பற்றி சிந்திப்போம். இந்த மாத கட்டுரையில் இயேசுவின் மீட்பின் தன்மையை பற்றி எடுத்துரைத்து, அன்னை மரியாவின் வரலாற்றையும் அழகுற எடுத்துரைப்பதை பற்றி காண்போம்.

**தாவீதின் வழி மரபு**

எருசலேம் நகரத்து புனித சிரில், மற்ற திருஅவையின் தந்தையர்களை காட்டிலும் இயேசுவின் வழிமரமான தாவீதின் வழி மரபை பற்றி அதிகமாக விவரிக்கிறார். இயேசுவின் பாடுகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க அவர் தாவீதின் வழி மரவை பற்றி பேசுகிறார். அதிலே இயேசுவின் பிறப்பை இணைத்து, மீட்பர் இயேசுவின் பிறப்பிலே தாவீதின் வழி மரபு வருவதை மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டுகிறார். மத்தேயு நற்செய்தி 1:1 வரும் "தாவீதின் மகனும் ஆபிரகாமின் மகனுமான இயேசு கிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல்" என்ற தொடக்க இறைவார்த்தை பயன்படுத்தி, இயேசு கிறிஸ்து மனிதனாக தாவீதின் வழி மரபில் பிறந்தார் என்று கூறி அவரது தெய்வீக தன்மையாகிய இறைத்தன்மையையும் இணைத்து உறுதிப்படுத்துகிறார். அதை உறுதிப்படுத்த ஆண்டவர் இயேசு "நேரத்திற்கு உட்பட்டவராகவும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டவராகவும் பெண்ணிடம் பிறந்தவராகவும்" என்ற புனித பவுலடியாரின் இறைவாவார்த்தைக்கு சான்றாக மத்தேயு 1:1 என்ற வரலாற்று சாந்தான இறை வார்த்தையை குறிப்பிடுகிறார்.

அன்னை மரியாவிடம் பிறந்த இயேசுவின் மீட்பின் தன்மையை உறுதிப்படுத்தி இரண்டு திருப்பாடல்களை இவர் மேற்கோள் காட்டுகிறார். இயேசுவின் மனித இயல்பை விவரிக்க திருப்பாடல்கள் 110:3 "நீர் உமது படைக்கு தலைமை தாங்கும் நாளில் தூய கோலத்துடன் மக்கள் உம்மை உவந்தளிப்பர், வைகறை கருவுயிர்த்த பனியைப் போல உன் இளம் வீரர் உம்மை வந்தடைவர்' என்ற இறை வார்த்தையை மேற்கோள் காட்டுகிறார். இயேசுவின் தெய்வீக இறையியல்வை சுட்டிக்காட்ட திருப்பாடல் 2:7 "நீர் என் மைந்தர் இன்று நான் உன்னை பெற்றெடுத்தேன், என்ற இறை வார்த்தையை மேற்கோள் காட்டுகிறார்.





புனித லூக்கா தமது நற்செய்தியில் மிக அழகாக மரியாவின் வீடு திரும்புதலைக் குறிப்பிடுகிறார். 'மரியா ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தோடு தங்கியிருந்த பின்பு தம் வீடு திரும்பினார்". மீண்டும் ஒரு நீண்ட நெடிய பயணம். மகிழ்ச்சியான பயணம். அனுபவம் நிறைந்த பயணம். பயணத்தின் தொடக்கத்தில் எருசலேம் ஆலயத்தைச் சந்தித்திருக்கலாம். அது மட்டில்லா மகிழ்ச்சியை அன்னைக்குக் கொடுத்திருக்கும். குழந்தை இயேசுவை இதே கோவிலில் காணிக்கையாக தாம் விரைவில் கொண்டு வர வேண்டும் என்ற சிந்தனைகளில் மூழ்கியவராய் கலிலேய நாட்டுப் பயணம் தொடர்கிறது. திருப்பாடல்கள், பாடல்களில் தம் இதயத்தை நிறைத்தவராய் நடந்தாலும், சக்கரியாவின் வீட்டில் நடந்த அற்புதம், பெந்தக்கோஸ்து அனுபவத்தின் முன்சுவை, இயேசுவின் முன்னோடியின் பிறப்பு ஆகிய நிகழ்வுகள் பெருமகிழ்வை அன்னையில் ஏற்படுத்துகின்றன. மூன்று மாத காலம் ஒரு நிறை மாத கற்பிணிக்குச் செய்த அனைத்துப் பணிகளையும் நினைத்துப் பார்க்கின்றார். ஒரு தாயாக, செவிலியராகப் பணியாற்றியதை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறார். தனது கருவில் வளரும் குழந்தைக்கு இப்போது மூன்று மாதம். உடலில் சில அசௌகரியங்களை உணர்ந்த போதிலும் இயேசுவைத் தாங்கிய முதல் நற்கருணைப் பேழையின் பயணம் தொடர்கிறது. வழியெல்லாம் இறை ஆவியாரால் நிரப்பப்படுகிறது. அன்னையோடு நாமும் பயணிப்போம். இறைவார்த்தையை இதயத்தில் சுமந்தவர்களாய் செல்வோம். ஆண்டவரின் பிரசன்னத்தில் பயணிப்பது பெரும் ஆனந்தமே. நமது பயண வேளைகளிலும் அது திருப்பயணமாக அமைய நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை ஜூபிலி ஆண்டில் திருஅவை நமக்கு உணர்த்துகிறது. அதையும் தெரிந்து கொண்டு எதிர்காலத்தில் நமது பயணங்களும் உண்மையிலே திருப்பயணங்களாக அமைய நம்மைத் தயாரித்துக் கொள்வோம்.

**திருஅவையில் திருப்பயணம்**

ஜூபிலி ஆண்டின் சிறப்பு நிகழ்வான திருப்பயணம் எல்லைகளைக் கடந்து பயணிக்க நமக்கு அழைப்பு விடுக்கிறது. கடந்து செல்லும் பயணம் என்பது நாம் இருப்புகளை மட்டுமல்ல் நம் வாழ்வையும் மாற்றும் நோக்கம் கொண்டது. நம் பாதைகளைத் திட்டமிடவும் நம் இலக்கைப் பற்றிய தெளிவு பெறவும் திருப்பயணங்கள் பல்வேறு எல்லைகளைக் கடந்து செல்ல, பயணங்கள் நம்மைத் தூண்டுகின்றன. எல்லைகளை மட்டும் அல்ல, நம்மை இன்றும் மற்றவர்களிடமிருந்து பிரிக்கும் தடைக் கற்களான மொழி, நிறம், இனம், சாதியம் இவற்றையும் கடந்து நம் இலக்கை நோக்கிப் பயணிக்கும் திருப்பயணத்திற்கு இது நம்மை அழைக்கிறது. திருப்பயணம் என்னும் சொல் 'பெர் ஏஜர்" என்ற இலத்தீன் மூலச் சொல்லிலிருந்து பிறக்கின்றது. இதன் பொருள் என்னவெனில் வயல்களைக் கடந்து, எல்லைகளைத் தாண்டி பயணிப்பது என்பதாகும். மரியாவின் வாழ்வில் இது நிகழ்கிறது. எல்லைகளைத் தாண்டிச் சென்றார். பள்ளத்தாக்கு, மலைப்பிரதேசம், வயல்வெளி என்று அவருடைய பயணம் அமைந்திருந்தது. திருவிவிலியத்தின் தொடக்க நூலில் ஆண்டவர் ஆபிரகாமை நோக்கி பின்வருமாறு கூறுகிறார். 'உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவருடமிருந்தும் உன் தந்தையின்

வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்கு காண்பிக்கும் நாட்டிற்குச் செல்" (தொ. நூல் 12:1) இந்த வார்த்தைக்கு ஆபிரகாம் கீழ்ப்படிந்து வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிப் பயணித்தார். இயேசுவின் இறையாட்சி பணியும் ஒரு திருப்பயணமே எனலாம். கலிலேயாவில் தொடங்கி எருசலேமில் நிறைவுபெறும் ஒரு பயணமாகவே இயேசுவின் பணி பார்க்கப்படுகிறது. மீட்பின் பயணத்தை மேற்கொள்ள 'நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" எனவும் 'அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர்" எனவும் 'நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரையிலும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்" எனவும் தம் சீடர்களுக்கு இயேசு பணித்ததும் ஓர் எல்லையை நோக்கியப் பணியின் பயணமாகவே பார்க்கப்படுகிறது. புனித பவுலடியாரும் எருசலேம் தொடங்கி இல்லிரிக்கம் மாநிலம் வரை எங்கும் சுற்றி கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும் பணியை முடித்துவிட்டேச் சென்றார்.

நாமும் திருப்பயணிகள். ஒவ்வொரு நாளும் திருப்பயணங்கள் மேற்கொள்கிறோம். ஒவ்வொரு முறையும் திருப்பலியில் பங்கேற்க ஆலயத்திற்குச் செல்வது கூட ஒரு திருப்பயணமே. திருப்பலியில் நற்கருணை உட்கொள்ளச் செல்வது கூட ஒரு திருப்பயணமே. விண்ணக விருந்தின் முன்சுவையை அருந்துகிறோம். விண்ணக வீட்டின் அடையாளமாக நமது கோவில்களும் திருத்தலங்களும் அமைந்துள்ளன. திருத்தலங்களை சந்திப்பதோடு நின்றுவிடாமல் நன்மையான காரியங்களிலும் பிறரன்பு செயல்களிலும் நாம் இறங்க வேண்டும். அப்போதுதான் நமது திருப்பயணம் முழுமை பெறும். அன்புக்காக, ஆறுதலுக்காக, ஒரு புன்முறுவலுக்காக, ஒரு உதவிக்கரம் தேடி எண்ணற்ற நோயுற்றோர், ஆதரவற்றோர் ஆவலோடு ஈரமான இதயம் உள்ளோரை எதிர்பார்த்து இல்லங்களிலும் மருத்துவமனைகளில் இருக்கின்றனர். இவர்களில் துன்புறும் இயேசுவை நாம் காண துடிதுடித்துக் கொண்டு இருக்கின்றனர். அவர்களைச் சந்திக்க விரைந்து செல்ல வேண்டும் என மரியா-எலிசபெத்து சந்திப்பு நமக்கு அறிவுறுத்துகிறது. அன்னையிடமிருந்து தியாகமிக்க பயணம் மேற்கொள்ள கற்றுக் கொள்வோம். மீண்டும் ஒருமுறை அவர் தனது இரண்டாவது பயணத்தின் வழியாக நமக்குக் கூறும் செய்தியைக் கேட்டு அதை நமது வாழ்வாக்க முயல்வோம்.

**பயணிக்கும் மரியாவின் செய்திகள்**

மரியா-எலிசபெத்து இருவரின் சந்திப்பின் முடிவு இந்தப் பயணம். இருவருக்கும் இடையே நிகழ்ந்த நெருங்கிய ஆதரவு, ஆன்மிக உறவு இங்கு வெளிப்படுகிறது. மரியா ஆறுதல் அடைந்தார். மெசியாவின் தாயின் செயல்பாடுகளை ஆவியாரால் அறிவுறுத்தப்பட்டவராகத் திரும்பினார். இறைவனின் பேரன்பு, கருணை இங்கு வெளிப்படுகிறது. மரியாவின் நம்பிக்கை, தாழ்ச்சி, தன்னலமற்று பணிபுரியும் மனநிலை, அதிசயிக்கின்றஇறைவனின் பிரசன்னம் மனித உறவுகளில் பரிணமித்து அனைத்தும் நமக்குச் சிறந்த பாடமாக விளங்குகிறது.

தொடர்ச்சி 27 ம் பக்கம்...........





செபமாலை செபிக்கிறோம் என்பதை நன்கு சிந்திக்க வேண்டும். செபமாலையை நன்கு செபிக்கும் போது கடவுள் மீது நமக்குள்ள அன்பும், பிறர் சிநேக பண்பும் நம்மில் வளரும். இப்போது கற்பனையாக நாம் ஒரு நிகழ்வை சிந்திப்போம். கத்தோலிக்க கிறிஸ்தவன் ஒருவன் தன் வாழ்நாளை நிறைவு செய்து நடுத்தீர்வைக்காக கடவுளின் முன் நிற்கிறான். அவனை குற்றம் சாட்டுவதற்காக அவனுடன் இருக்கும் பிசாசு அவனைப் பற்றி பல்வேறு குற்றச்சாட்டுகளை முன் வைக்கிறான். அப்போது அன்னை மரியாள் அங்கு வந்து இயேசுவிடம் அன்பு மகனே! இந்த ஆன்மா உலகில் வாழும்போது என்னை மகிமைப்படுத்த செபமாலை செபித்துள்ளான். ஏனவே அவனுக்கு இரக்கம் காட்டுங்கள் என்று மன்றாடுகிறார். அப்போது இயேசு, சரி அம்மா! அவன் தன் வாழ்நாளில் ஒருமுறையேனும் தேவ இரகசியங்களை தியானித்தபடி இருநூற்று மூன்று மணி செபமாலை செபித்திருந்தால் அவனுக்கு இரக்கம் காட்டுகிறேன் என்று கூறுகிறார். அப்போது அன்னை மீண்டும் தன் மகனிடம், என் மகனே இயேசு ஒருவேளை அவன் நூற்றைம்பத்து மூன்று மணி செபமாலை செபித்திருந்தால் என்று கூற, இயேசுவும் சரி நான் இரக்கம் காட்டுகிறேன் என்கிறார். மீண்டும் அன்னை ஐம்பத்து மூன்று மணி செபமாலை செபித்திருந்தால் என்றும் இறுதியாக பத்து மணி செபம் செபித்திருந்தால் என்றும் இயேசுவிடம் அன்னை மரியாள் பரிந்து பேச இயேசுவும் தன் தாயின் பரிந்தரையை ஏற்றுக் கொள்கிறார். அவன் பத்து மணி செபத்தை பக்தியோடு செபித்திருந்ததால் அன்னை மரியாவின் பரிந்துரையினால் கடவுளின் இரக்கத்தை பெற்றுக் கொள்கிறான்.

**அன்னை மரியாவின் வல்லமையான பரிந்துரை:**

அன்னை மரியாவுக்கு மிகவும் விருப்பமான புனித செபமாலையை நாள்தோறும் குடும்பமாக கூடி குறைந்தது ஐந்து பத்து மணிகள் முழங்காலில் இருந்து அன்னை மரியாவின் கருத்துகளுக்காக அன்னையோடு இணைந்து இருநூற்று மூன்று மணி செபமாலை செபிக்கும் குடும்பங்கள் எல்லா ஆசீர்வாதங்களையும் உறுதியாக பெற்றுக்கொள்ள முடியயும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. செபமாலை செபத்தின் வழியே ஆன்ம மீட்சி ஏற்பட்டு மனிதகுலம் முழுமையாக அன்பு தூய அருள் பெற்று மனஸ்தாபம் என்ற பாதையில் இறைவனின் பக்கம் திரும்பிவர காரணமாக அமையும் என்று அன்னையே அருட்திரு.ஸ்தேவானோ கோப்பி என்னும் குருவானவருக்கு கூறியுள்ளதால், தினந்தோறும் நான்கு தேவ இரகசியங்களை தியானித்து ஒரு முழு செபமாலை செபித்து அனைத்து விதமான ஆசீர்வாதங்களையும் முழுமையாகப் பெற்றுக்கொள்வோம். அன்னையின் பிறந்த நாளுக்கு நாம் கொடுக்கும் அன்புப் பரிசாக முழு செபமாலையை குடும்ப செபமாலையாக செபிப்போம் என்னும் உறுதிமொழியை கொடுப்போம். அன்னையின் அரவணைப்பையும் பாதுகாப்பையும் வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்டு கடவுளை மகிமைப்படுத்துவோம்.

மரியே! எங்கள் அன்பு குழந்தை மாதாவே! வாழ்க!



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 11

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

தந்தையாம் இறைவனின் அன்புப் பிள்ளைகளாகிய நாம், நம் அன்புத் தாயாம் அன்னை மரியாவை வழிநடத்தும் ஆசிரியையாகக் கொண்டு எபிரேயர் 12:2-3 இல் 'நம்பிக்கையை தொடங்கி வழி நடத்துபவரும் அதை நிறைவு செய்பவருமான இயேசுவின் மீது கண்களை பதிய வைப்போம். என்பதைக் அடிப்படையாகக் கொண்டு எப்போதும் இயேசுவின் பாடுகளையும் மரணத்தையும் சிந்தித்து அவரை ஆராதித்துக் கொண்டிருந்தால் உங்களுக்கு வேண்டியதை அவரே தருவார் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருங்கள் என்பதை குறித்து சிந்தித்தோம். அதன் அடிப்படையில் அடுத்ததாக அன்னை மரியாள் நமக்கு கற்றுத் தரும் நம்முடைய ஆன்ம ஈடேற்றத்திற்கான கருத்துகளை கவனமுடன் படித்து சிந்திப்போம்.

**அன்னை கற்றுத் தரும் பாடம்:**

என் அன்பு மகனே! மகளே! இன்று நான் உனக்கு கற்றுத்தரும் பாடம் எதைப் பற்றியது என்றால் தொடக்கநூல் 18:16-33 வரை உள்ள இறைவார்த்தையை வாசித்து தியானியுங்கள். அவற்றில் ஆபிரகாம் சோதோமுக்காக மன்றாடுகிறதை பார்க்கிறோம். கடவுள் சோதோமுக்கு செய்யவிருப்பதை ஆபிரகாமிடம் கூறுகிறார். ஆனால் ஆபிரகாம் உடனே கடவுளிடம் அவர்கள் அனைவரும் தீயவர்கள், அவர்கள் அழிவதுதான் முறை, எனவே அழித்துவிடும் என்று கூறவில்லை. மாறாக அவர்களுக்காக பரிந்து பேசுகிறார். ஐம்பது நீதிமான்கள் இருந்தால் நகரை காப்பாற்றும் என்று வேண்டுகிறார். அதற்கும் கடவுள் உடன்படுகிறார். பின்னர் ஐம்பது பேர், நாற்பத்தைந்து பேர், நாற்பது பேர், முப்பது பேர், இருபது பேர் என்றும் கடைசியாக பத்து பேர் என்றும் மன்றாடுகிறார் கடவுளும் அந்தப் பத்துப் பேரை முன்னிட்டு அழிக்கமாட்டேன் என்று உறுதி கூறுகிறார். இங்கு நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டியதும் விசுவசிக்க வேண்டியதும் கடவுளின் பேரிரக்கத்தைப் பற்றியதாகும். அதேபோல் ஆபிரகாமிடம் கடவுள் மீது கொண்டுள்ள அன்புள்ளத்தையும் நம்பிக்கையும் பிறர்மீது கொண்டுள்ள அன்பையும் புரிந்துகொண்டு நீங்களும் ஆபிரகாமைப் போல் கடவுளின் அன்புக்குரிய பிள்ளைகளாக வாழ முயற்சி செய்யுங்கள். கடவுள் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பார்.

**அன்னையின் பாடத்தை நடைமுறை வாழ்வில் செயல்படுத்துதல்:**

அன்பிற்குரியவர்களே! ஆபிரகாமைப்போல விசுவாசத்திலும் பிறர் சிநேகத்திலும் நாம் வளர வேண்டும். அதற்கு மாதா நமக்கு தந்துள்ள எளிமையான வழி செபமாலை செபிப்பதே! இன்று நாம் எவ்வாறு





# அன்னையின் 80 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## மங்களவார்த்தை அன்னை பேராலயம், விச்சென்சா (Vicenza) இத்தாலி

விச்சென்சா வடஇத்தாலியில் உள்ள ஒரு விவசாய மற்றும் தொழில் நகரமாகும். பல்லாதியோ என்கிற புகழ்பெற்ற கலைஞரின் கைவண்ணத்தால் உருவான பல கட்டிடங்கள் இங்குள்ளதால், இதை பல்லாதியின் நகரம் என்றும் அழைப்பதுண்டு. இதன் பழமையை போற்றும் விதமாக இந்நகரத்தை உலக பராம்பரிய நினைவு நகரமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. இத்தாலியின் புகழ்பெற்ற அன்னை மரியாவின் திருத்தலமான மோன்தே பெரிகோ இந்நகரில் தான் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தை பற்றி நாம் கட்டுரை எண் 13ல் வாசித்திருப்போம். இக்கட்டுரையில் இம்மறைமாவட்ட பேராலயம் உருவான வரலாற்றை அறிவோம்.

விச்சென்சா நகரம் உரோமையர் ஆட்சி காலத்திலிருந்தே முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகும். இந்நகரில் உரோமையர் காலத்து வரலாற்று எச்சங்கள் இன்றும் உள்ளன. வரலாற்றின் ஓட்டத்தில் இந்நகரம் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மாறியது. இரண்டு உலகப் போர்களிலும் இந்நகரம் தாக்கப்பட்டது. இன்றும் இந்நகரில் மிகப்பெரிய அமெரிக்க படைத்தளம் அமைந்துள்ளது.



கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலியின் தொடக்கத்திலேயே கிறிஸ்தவம் இந்நகரில் பரவத் தொடங்கியது. தொடக்க காலத்தில் முதலாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு பழைய உரோமைக் கட்டிடம் இவர்கள் கூடிவந்து செபிக்கும் இடமாக இருந்திருக்கிறது. பின், கி.பி. 331ஆம்

ஆண்டு பேரரசர் கான்ஸ்டன்டைன் உத்திரவுக்கு பின், ஒரு சிறிய ஆலயம் கட்டப்பட்டது. இந்த ஆலயமானது, ஒரு எண்கோணமுள்ள ஆலய மையப்பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. ஐந்தாம் நூற்றாண்டில் புனிதர்களான பெலிசிட்டா மற்றும் போர்த்துனாத்தோவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு ஆலயம் நகரின் மதிற்சுவர்களுக்கு வெளியே கட்டப்பட்டது.

கி.பி. 589ஆம் ஆண்டு ஓரோன்சியோ என்பவர் விசென்சா நகரின் முதல் ஆயராக நியமிக்கப்பட்டார். இவர் இச்சிறிய ஆலயத்தை இடித்துவிட்டு புதிய நீள் வாட்டிலுள்ள பெரிய ஆலயத்தை மூன்று மையப்பகுதிகளை கொண்டதாக கட்டினார். கி.பி. 1177ல் ஏற்பட்ட பெரிய நிலநடுக்கத்தில் இந்த ஆலயம் சிதிலமடைந்து பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாமல் போனது. ஆலய மறுசீரமைப்பிற்காக பேரரசர் இரண்டாம் பெரடரிக் முதலியோர் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. பதிமூன்றாம் நூற்றாண்டின் மத்தியில் இந்நகரின் ஆயராக பொறுப்பேற்ற ஆயர் பர்த்தலோமேயு தே பெர்கான்சா என்பவரின் முயற்சியால் புதிய ஆலயம் ஒன்று கட்டப்பட்டது.



இந்த ஆலயம் மூன்று மையப்பகுதிகளையும், நுழைவாயில்களையும் உடையதாக அமைந்தது. பல்வேறு உபகாரிகளின் உதவியால் கட்டப்பட்ட இந்த ஆலயமும் காலப்போக்கில் வலுவிழந்தது. இறுதியாக, தற்போதுள்ள ஆலயத்தின் வடிவில் கி.பி. 1444 - கி.பி. 1467 ஆண்டு காலக்கட்டத்தில் ஒரு ஆலயம் கட்டப்பட்டது. ஆலயத்தின் முகப்பு கோதிக் கட்டிட கலையில் வெனிஸ் நகரைச் சார்ந்த தோமேனிக்கோ என்பவரால் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டது. ஆலயத்தின் உள் உள்ள சிற்றாலயங்கள் 12ஆம் நூற்றாண்டு பாணியிலும் கட்டப்பட்டன. ஆலயத்தின் பணிகள் தொடர்ந்து நடைபெற்றவண்ணம் இருந்தது.







8-ம் பக்க தொடர்ச்சி.........

வானதூதரின் வாழ்த்தைப் பெற்றபின் மரியாவில் தனிமை, தயக்கம் தொடர்ந்தது. அனைத்திற்கும் எலிசபெத்தின் வீட்டில் விடை தேடினார். எலிசபெத்து தன்னை 'ஆண்டவரின் தாய்" என்று அழைத்தது, அவர் வயிற்றில் குழந்தை யோவான் துள்ளியது எல்லாமே மரியாவின் நம்பிக்கையை ஆழப்படுத்தியது. இருவரும் சந்தித்த அந்த அருளின் நேரம் மனதில் அசைவாட, தனது இரண்டாவது பயணம் இனிமையாக அமைந்தது. ஆசீர்வதிக்கப்பட்ட இரு பெண்களும் மேலும் இச்சந்திப்பில் ஆசீர்வதிக்கப்படுவதையும் நினைத்து பெருமகிழ்ச்சி அடைவோம். நம்பிக்கையும் செயல்பாடும் நிறைந்த தனது விடுதலைக்கீதம் விரைவில் நனவாக்கப் போவதை நினைத்து அப்பாடலை சத்தமாகப் பாடிச் செல்கின்றார். மரியா-எலிசபெத்து சந்திப்பில் வெளிப்பட்ட இறைப்பிரசன்னத்தையும், அது மனித உறவாடல்களின் ஒருவர் கொடுப்பதும் மற்றவர் பெறுவதுமாக அமைந்ததை நினைத்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்குகிறார் மரியா. எலிசபெத்துக்குத் தேவையான இந்த பெரிய உதவியை நினைத்து அதை இறைவனின் கருணையாகவே மரியா செய்ததாக நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

மிகவும் நீண்ட ஆபத்தான பயணம். ஒரு வழிப்பயணம் 100 மைல் தூரம். கொள்ளையர்கள் நடமாடக்கூடிய இடம். ஆயினும் மரியா துணிவுடன் இப்பயணத்தை மேற்கொள்கின்றார். மற்ற யாத்திரிகர்களுடன் பயணித்திருக்கலாம். தூய வளனார் கூட இப்பயணத்தில் உடனிருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. குழந்தை இயேசுவைப் பெற்றெடுக்க மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள இம்மூன்று மாத காலமும் அமைந்திருந்தது.

**நிறைவுரை**

நமது பயணங்கள் எவ்வாறு அமைகின்றன? நம்பிக்கை ஆண்டில் எதிர்நோக்கின் பயணிகளாக நாம் நம்மைத் தயாரித்து வருகின்றோம். நம்மிடத்தில் எழும் மாற்றங்கள் என்ன? எத்தகைய மனநிலையுடன் நமது திருப்பயணத்தை மேற்கொள்கிறோம்?. புனித ஆண்டு என்று அழைக்கப்படும் ஜூபிலி ஆண்டில் நாம் மேற்கொள்ளும் திருப்பயணம் நமக்கு அருளுக்கு மேல் அருளைக் கொண்டு வரவேண்டும். அருளால் நிரப்பப்பட்டவர்கள் பிறரை அன்பு செய்ய முன்வர வேண்டும். மரியாவைப் போல் தேவையில் இருப்போருக்கு உதவிக்கரம் நீட்ட எத்தகைய சிரமத்தையும் பார்க்காமல், நீண்ட, குறுகிய பயணம் மேற்கொள்ள, தாராள மனதுடன் முன்வருவோம். உதவி செய்யும் நேரத்தை மனமகிழ்வுடன் செலவழிப்போம். பிரதிபலன் எதிர்பாராமல் நமது உதவிகள், அறச்செயல்கள் இடம்பெற வேண்டும். செப சூழலில் நமது உதவிகள் பிறப்பெடுப்பது நல்லது. நமது உரையாடல்கள், உறவாடல்களில் இறைப்பிரசன்னம் வெளிப்பட வேண்டும். நமது பயணங்களில் இறைவார்த்தை பகிரப்பட வேண்டும். நாம் பங்கேற்கும் நற்கருணை கொண்டாட்டங்கள் நமது வாழ்வோடு கலக்க வேண்டும். நாம் யாரோடு இணைந்து பயணிக்கின்றோமோ அவர்களோடும் இறைவார்த்தை, நற்கருணை பற்றிய உரையாடல்களை ஆழப்படுத்தி, ஒருவர் ஒருவரின் மறை அறிவை விசாலமாக்குவோம். இவ்வாறு புதிய எண்ணங்களும் செயல்பாடுகளும் நமது பயணத்தில் மலர்கின்றன. திருப்பயணம், வாழ்வு மாற்றத்தின், மனமாற்றத்தின் வெளிப்பாடாகவும், ஒருவரின் தனிமனித இருப்பை இறைவனில் தூய்மையை நோக்கிப் பயணிக்கவும், உயர்த்தவும் நம்மை அழைக்கிறது. இத்தகைய எண்ணங்கள், சிந்தனைகள், செயல்பாடுகள் நமது இதயத்தை நிரப்பட்டும். நமது திருப்பயணம் விண்ணகத்தை நோக்கி நீண்டு கொண்டே செல்லட்டும்.

**5. ஐந்தாவதாக,** பழைய ஏற்பாட்டில் மோயிசன் இஸ்ரேல் மக்களை அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க அழைக்கப்பட்டார் (விடுதலைப் பயணம்: 3:7-12). புதிய ஏற்பாட்டில் மரியா நம்மையெல்லாம் அக விடுதலைக்கு அழைத்துச் செல்ல, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்க புதிய மோயிசனாக இயேசுவை நமக்கு பெற்று தந்திருக்கிறார் “அவர் ஒரு மகனை பெற்றெடுப்பார், அவருக்கு இயேசு என பெயரிடுவீர், ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவங்களில் இருந்து மீட்பார் (மத்தேயு 1:21).

**6. ஆறாவதாக,** அன்னை மரியா ஒரு நல்ல முன்மாதிரியான தாயாக தன் குழந்தையின் மீது அன்பும் அதேசமயம் கண்டிப்பும் கொண்ட தாயாக இருந்து மற்ற தாய்மார்கள் அனைவருக்கும் முன்மாதிரியான தாயாக விளங்குகின்றார். “மகனே ஏன் இப்படி செய்கிறாய்? இதோ பார்! உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோம்” (லூக்கா: 2:48).

**7. ஏழாவதாக,** அன்னை மரியா இயேசுவின் மீது மட்டும் அக்கறை கொண்டவராக இல்லாமல் அனைத்து மனிதர்கள் மீதும் குறிப்பாக ஏழைகள் மீது அக்கறை கொண்டவராக மக்களின் தேவையை தன் மகனிடம் கூறி அவைகளை பூர்த்தி செய்பவராக இருக்கின்றார் (யோவான் 2:1-14).

**8. இறுதியாக**, கல்வாரியில் தன் மகனை நமக்காக தியாகம் செய்ததோடு மட்டுமில்லாமல், நமக்கெல்லாம் தாயாக, இயேசுவின் மறையுடலான திரு அவையின் தாயாக இருக்கின்றார். இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தன் அன்பு சீடரையும் கண்டு தன் தாயிடம் “அம்மா இவரே உன் மகன்” என்றார். பின்னர் தம்சீடரிடம் “இவரே உன் தாய்” என்றார். ஆக மரியா மாபெரும் மகிழ்ச்சியை தரும் தாயாக இருக்கின்றார் (லுக்கா 2:10). இந்த மகிழ்ச்சி, சந்தோஷம், பரிசுத்த ஆவியின் கனிகளில் ஒன்றாக இருக்கின்றது (கலாத்தியர் 5:22). இந்த சந்தோஷம் பிறரையும் மகிழ்ச்சியாக வைத்திருக்கும் ஒன்றாக இருக்கின்றது (எஸ்தர் 10:10, நெகேமியா 12:43). எனவேதான் மரியா எலிசபெத்தை சந்தோஷத்துடன் வாழ்த்திய போது அவர் வயிற்றில் இருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று.

இன்று நம்முடைய வாழ்வை எடுத்துக் கொள்வோம், நாம் பிறருக்கு எந்த வகையில் சந்தோஷம் தருபவராக இருக்கின்றோம்? பிறருக்கு கெடுதல் செய்து சந்தோஷம் அடைகின்றோமா? இந்த உலகத்தின் மாய வலைக்குள் விழுந்து அதன் மூலம் கிடைக்கும் இன்பத்தில் இருக்கின்றோமா? இறைவனின் திருவுளத்தை மரியா ஏற்று அதன் மூலம் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் அடைந்தார். பிறருக்கும் அதை பகிர்ந்து கொடுத்தார் அன்னை மரியா போல நாமும் இறைவனின் சித்தத்தை நிறைவேற்றி சந்தோஷம் அடைகின்றோமா? நம் சந்தோசம் தன்னலம் மிக்கதாக இருக்கிறதா அல்லது பொதுநலம் மிக்கதாக இருக்கிறதா? அன்னை மரியாவை போல இறைவனின் திட்டத்திற்கு “ஆமென்” எனக் கூறினால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும் (யோவான் 16:20) என்பதில் ஐயமில்லை. அப்போது தாயைப் போல பிள்ளைகளாகிய நாமும் பிறருக்கு மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் தருவோம் என்பது உறுதி.

**எங்கள் சந்தோஷத்தின் காரணமே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.**







ஆலயத்தின் மையப்பகுதி கி.பி. 1482ஆம் கட்டி முடிக்கப்பட்டாலும் பணிகள் நிறைவுறாமலேயே இருந்தது. கி.பி. 1540 ஆம் ஆண்டு திருத்தந்தையின் வேண்டுகோளுக்கிணங்க திருஅவையின் பொதுசங்கம் விச்சென்சா பேராலயத்தில் நடத்த முடிவெடுக்கப்பட்டு,



அப்பொது சங்கத்திற்கான ஆலயத்தின் கூரை முழுவதும் வேயப்பட்டது. ஆனால், அத்திருச்சங்கம் திரிதெந்து நகருக்கு இடமாற்றம் பெற்றது. அதுதான், மிகப்புகழ் பெற்ற திரிதெந்து பொதுசங்கம் ஆகும். ஒருவேளை அத்திருச்சங்கம் விச்சென்சாவில் நடைபெற்றிருந்தால் இப்பேராலயத்தின் பெருமை வரலாற்றின் ஏடுகளில் அழிக்கமுடியாத இடம் பெற்றிருக்கும்.



கி.பி. 1560ஆம் ஆண்டு பவுலோ அல்மேரிக் என்பவர் ஆலயக் குருக்களின் அனுமதியுடன் ஆலயத்தின் மேற்கு பகுதியில் ஒரு கதவை நிர்மாணித்தார். அக்கதவு திருமுழுக்கு யோவான் சிற்றாலயத்திற்கு நேராக செல்ல



வழிவகுத்தது. இக்கதவானது, கி.பி. 1565ஆம் ஆண்டு ஆயர் மத்தேயு பிருலி விச்சென்சா மறைமாவட்ட ஆயராக பொறுப்பேற்றபோது இக்கதவு அர்ச்சித்து திறக்கப்பட்டது.



கி.பி. 1557ல் ஆலயத்தை புதுப்பிப்பிதற்கான அனுமதியை வெனீஸ் அரசிடமிருந்து விச்சென்சா பெற்றது. இப்புதுப்பித்தல் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றும் பொறுப்பு அந்திரேயா பல்லாதியிடம் ஒப்படைக்கப்பட்டது. கி.பி. 1558ஆம் ஆண்டு ஆலய வெளிப்புற சுவரில் உள்ள அலங்கார வளைவுகளை நிறைவு செய்தார். கி.பி. 1566ல் ஆலய மையக் கோபுரத்தை முழுமையாக

நிறைவு செய்து, விச்சென்சாவின் எங்கிருந்து பார்த்தாலும் அழகுற ஓங்கி நிற்கும் இக்கோபுரத்தை காணச் செய்தார்.

ஆலயத்தின் தெற்கு பகுதியில் ஆலய மணிக்கோபுரமானது உள்ளது. இக்கோபுரமானது ஆலயத்தை ஒட்டி அமைந்துள்ளது. இது ஒரு தனிக்கட்டிடமாக கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.



ஆலயத்தின் மையப்பகுதியானது கோதிக் கட்டிட கலையில் இருபுறமும் சிற்றாலயங்களுடன் கட்டப்பட்டுள்ளது. ஆலயத்தின் மையப்பீடப்பகுதியானது, மையப்பகுதியிலிருந்து உயர்த்தப்பட்ட நிலையில் கோதிக் சிஸ்டர்சியன் கட்டிட பாணியில் கட்டப்பட்டுள்ளது.

மையப்பகுதின் மேல் வரிசையாக வடிவமைக்கப்பட்டுள்ள வானதூதர்களின் சிரூபங்களும், மையப்பீடத்திற்கு பின் வண்ணக்கண்ணாடி சன்னல்களில் பல விவிலிய நிகழ்வுகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன. மையப்பீடத்தின் ஒருபுறம் மங்களவார்த்தை நிகழ்வு ஓவியமாகவும், மறுபுறம் மாந்தரின் மீட்பு நிகழ்வாக அமைந்த இயேசுவின் சிலுவை மரணம் ஓவியமாகவும் வரையப்பட்டுள்ளன.

ஆலயத்தின் கீழ்பகுதியில் உரோமைக்கால சிதைவுகளும், கி.பி. 8-9ஆம் நூற்றாண்டு ஆலயத்தின் சிதைந்த பகுதிகளும் பாதுகாப்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயத்தின் மையப்பீடமும், வைசோன் மறைமாவட்ட ஆயராயிருந்த ஜிரோலோமோ பெனுச்சியின் கல்லறையும் அந்திரேயா பல்லாதியோ என்கிற புகழ்பெற்ற கலைஞரின் ஒப்பற்ற கைத்திறன் என்போர் உள். 16ஆம் நூற்றாண்டின் மத்தியில் பல விச்சென்சா நகர் கலைஞர்கள் பல சிறப்பான படைப்புகளை இப்பேராலயத்தில் செய்தனர். குறிப்பாக, வடக்கு நுழைவாயில் கலை படைப்புகளுடன் கூடியதாக அமைந்தது.

இங்குள்ள இடதுபுற சிற்றாலயங்களுள் சிறப்பு வாய்ந்ததாக தியேனே குடும்பத்தின் சிற்றாலயம் உள்ளது. இங்குள்ள ஆண்டவரின் பாடுபட்ட சிலுவை திருஉருவம் எல்லோரையும் அண்டிவந்து செபிக்க உதவுகிறது. மற்றொரு சிற்றாலயத்தின் வானதூதர்கள் மற்றும் புனிதர்கள் புடைசூழ அன்னை மரியாள்





# மாதா மன்றாட்டு மாலை

23



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## எங்கள் சந்தோஷத்தின் காரணமே

நாம் வாழும் இந்த சமூகத்தில் ஒரு சிலரை பார்த்தாலே அல்லது நினைத்தாலே போதும் நம் மனதில் பட்டாம்பூச்சி பறக்கும். சூரியனைக் கண்ட பனி போல நம் சோகங்கள் மறைந்து அனைத்தும் சுகங்களாக மாறும். அதேபோல நமக்குப் பிடிக்காத சில நபரை அல்லது செய்திகளை பார்த்தாலோ அல்லது நினைத்தாலோ, நம் சந்தோசம் எல்லாம் நீரில் போட்ட கோலம் போலவும், பனிக்கட்டியில் எழுதிய வரிகள் போலவும், மாயமாய் மறைந்துவிடும். இவ்வாறு நான் பார்க்கின்றபோது அன்னை மரியாவின் தரிசனம் அல்லது அவரைப் பற்றிய நினைவு நமக்கு சந்தோஷத்தை தருவதாக அமைகிறது. இதனால் தான் அன்னை மரியா எங்கள் சந்தோஷத்தின் காரணமே என புகழப்படுகின்றார். இதை ஆங்கிலத்தில் *Cause of our Joy* எனவும் இலத்தின் மொழியில் *Causa Nostrae Laetitiae* எனவும் அழைக்கின்றோம்.

விவிலிய பின்னணியின் படியும் கிறிஸ்தவ மரபுப்படியும் அன்னை மரியாவை "எங்கள் சந்தோஷத்தின் காரணமே" என்று அழைக்க பல காரணங்கள் இருக்கின்றன. ஒரு சிலவற்றை இப்போது காண்போம்.

1. **முதலாவதாக,** மரியாள் நாசரேத்தில் இருந்து வந்த முதல் நபர். ஏனெனில் நாசரேத்து என்ற ஊரில் இருந்து நல்லது எதுவும் வராது என்று எண்ணம் யூதர்களின் மத்தியில் இருந்தது. எனவேதான் நாசரேத்தில் இருந்து நல்லது எதுவும் வர முடியுமோ என்று கேட்கின்றார் (யோவான் 1: 46).


2. **இரண்டாவதாக,** மீட்பு திட்டத்தில் வாக்கு மனிதரானதில் மரியா பெரும்பங்கு வகித்தார், இறைவனோடு தன்னை ஐக்கிய படுத்திக் கொண்டார். இதனால் "நாசரேத்தின் மரியம்" தூய மரியாவாக மாற்றம் பெறுகின்றார்.

3. **மூன்றாவதாக,** பழைய ஏற்பாட்டில் ஆதாம் ஏவாளின் கீழ்படியாமை நமக்கு சாவை, பாவத்தை, மற்றும் துன்பத்தைக் கொடுத்தது. பாவத்திற்கு கிடைக்கும் கூலி சாவாக இருந்தது. புதிய ஏற்பாட்டில் புதிய ஏவாள் கூறிய "ஆமென்" அல்லது "உன் வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்று சொல் புதிய ஆதாம் ஆகிய "இயேசுவை" நமக்கு பெற்று தந்தது. இதன் மூலமாக சாவின் வெற்றி தகர்க்கப்பட்டது. சாவு முற்றிலும் ஒளிந்து வெற்றி கிடைத்தது. சாவே! உன் வெற்றி எங்கே? சாவே! உன் கொடுக்கு எங்கே? (1கொரிந்தியர் 15:54-55).

4. **நான்காவதாக,** விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம் இறைவனால் பழைய ஏற்பாட்டு மக்களுக்கு ஆசீராக ஏற்படுத்தப்பட்டார். உன் பெயரை நான் சிறப்புற செய்வேன் நீயே ஆசீராக விளங்குவாய் (தொடக்க நூல்: 12:12). அதுபோல புதிய ஏற்பாட்டில் அன்னை மரியா நமக்கு ஆசீராக இருக்கின்றார். ஆபிரகாம் பழைய ஏற்பாட்டில் விசுவாசத்தின் தந்தை, மரியா புதிய ஏற்பாட்டில் விசுவாசத்தின் தாய்.



# இறையடியார் கார்தினால் ரபயேல் மெர்ரி டெல் வால்



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

**Card. Rafael Merry del Val** (1865 – 1930)

மூன்றாம் சபையின் மாண்புமிகு அருட்தந்தை

கார்தினால் ரபயெல் 1865ம் ஆண்டு அக்டோபர் 10ம் தேதி லண்டனில் ஒரு மேல் வர்க்க குடும்பத்தில் பிறந்தார். உயர்தர கல்வி பயின்ற அவர், மனிதநேயம் மற்றும் ஆன்மீகத்தில் ஆழ்ந்த அறிவைப் பெற்றார். தனது தந்தையின் சந்தேகத்தை தாண்டியும், தனது வாழ்க்கையை கடவுளுக்கு அர்ப்பணிக்கும் முடிவு எடுத்த அவர், கடவுளுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யலாம் என்று தன் தந்தைக்குப் பதிலளித்தார்.

இறையியல் படிப்பை இங்கிலாந்திலும் ரோமிலும் முடித்த அவர், பின்னர் திருத்தந்தை லியோ XIII அவர்களின் பாதுகாப்பில், குருவாகும் முன்பே பணியாற்றினார். 1888ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி குருத்துவ அருட்பொழிவு பெற்ற அவர், இளைஞர்கள் மத்தியில் தனது பணியை ஆரம்பித்தார். ஆனால், திருத்தந்தை சார்பாக பல முக்கியமான பணிகளுக்கு அழைக்கப்பட்டார். திருத்தந்தை பத்தாம் பத்திநாதர், அவரை மிகவும் பெரிய பொறுப்புக்கு வத்திக்கான் நகரத்தில் அமர்த்தியபோது, ரபயேல் மிகவும் தயங்கினார். ஆனால், திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் ,˙நாம் ஒன்றாக வேலை செய்வோம், திருச்சபையின் அன்பிற்காக ஒன்றாக துன்பப்படுவோம்: என்று கூறி தன்னுடைய அருகில் வைத்துக்கொண்டார். இதற்க்கு காரணம் ரபயெல் இறை ஞானத்தை பெற்றிருந்தார். கார்தினால் ரபயெல், மரியின் மூன்றாம் சபையின் உறுப்பினராக கார்தினால் லெபிசியர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவர் வியாகுல அன்னை மரியாவிடம் மிகுந்த பக்தி கொண்டிருந்தார், மேலும் தினமும் வியாகுல அன்னையின் ஏழு துயர மாலையை செபிப்பதை ஒருபோதும் தவறவிடவில்லை. அவரது தனிப்பிரார்த்தனை அறையின் மையத்தில், வியாகுல அன்னையின் ஒரு அழகான ஓவியம் இடம்பெற்றிருந்தது, அதன் ஆன்மிக மற்றும் கலை பொருளை அவரே ஓவியருக்கு வழங்கியிருந்தார். அந்த அளவுக்கு அவருடைய ஆன்மிகமும், கலை மற்றும் ஞானமும் மேலோங்கி இருந்தது. அவரது ஆன்மீகம், இயேசுவின் சிலுவை மற்றும் மரியாவின் துயரங்களின் தியானத்தில் ஆழ்ந்திருந்தது. 1930ம் ஆண்டு பிப்ரவரி 26ம் தேதி, தனது இறுதி நாட்களிலும் உரோமையில் உள்ள இளைஞர்களுடன் சேர்ந்து பணியாற்றினார். ஒரு சிறிய உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட அவர், அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது, திருவருட்சாதனங்களைப் பெற்று, கடவுளின் திருவுளத்திற்கு முழுமனதாக சரணடைந்தார். அறுவை சிகிச்சையின் போது, அவர் கடவுளின் அரவணைப்பில் சேர்ந்தார். கார்டினல் மெர்ரி டெல் வால், ஒரு மிகுந்த தாழ்மையும், ஆழ்ந்த ஆன்மீக வாழ்க்கையும் கொண்டவராக விளங்கினார். அவரது பக்தி, பணி மற்றும் மரியன்னையின் சபையோடு கொண்ட தொடர்பு, அவரை ஒரு முழுமையான கிறிஸ்தவ ஆன்மீக முன்மாதிரியாக உயர்த்துகிறது. 'துயரங்களின் அன்னை, எங்கள் வாழ்க்கையின் நடுவில் இருக்கிறாள்' — இவ்வாறு நம்பிய அவரது வாழ்க்கை, இன்றும் நமக்கு ஒரு பிரகாசமான வழிகாட்டியாக உள்ளது.





நிற்கும் காட்சியானது ஓவியமாக உள்ளது. இன்னொரு சிற்றாலயத்தில் அன்னை மரியாள் விண்ணக மண்ணக அரசியாக முடிசூடப்படும் நிகழ்வானது ஓவியமாக வணக்கத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

வலதுபுற சிற்றாலயங்களில் முதல் சிற்றாலயத்தில் திருமுழுக்குத் தொட்டியும், அதனைத் தொடர்ந்துள்ள சிற்றாலயங்களில் இயேசு பாலனை தரிசிக்க வந்த ஞானிகளின் ஓவியமும், குழந்தையை கையில் தாங்கியிருக்கும் அன்னையை பதுவை அந்தோணியார், ஜெரோம் போன்ற புனிதர்கள் சூழ்ந்திருப்பதும் காட்சி படுத்தப்பட்டுள்ளது.
கோயில் வானுயர்ந்து நின்றதால், வானிலிருந்து வரும் ஆபத்துகளும் அதிகமாயிருந்தது. இரண்டாம் உலகப் போரில் ஆங்கில-அமெரிக்க படைகளின் குண்டுமழை தாக்குதலிருந்து இந்த ஆலயம் தப்பவில்லை. விண்ணைமுட்டும் கோபுரங்களும், திரிதெந்து சங்கத்தை நினைவுட்டிய ஆலய கூரைகளும், 16ஆம் நூற்றாண்டு கலைஞர்களின் கனவுகளும், 10ஆம் நூற்றாண்டு அழகுமிக்க ஆலய தரைத்தளமும் குண்டுகளின் கோபத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் சிதைந்து போயின. விச்சென்சா மங்களவார்த்தை பேராலயத்தின் கோபுரம், மையப்பகுதி போன்றவை இடிந்து போனது. இந்த ஆலயத்தை மீண்டும் புதுப்பித்துக் கட்டவேண்டும் என்பதில் உறுதியாயிருந்த மக்கள், இறுதியில் பல ஆண்டுகள் பணிகளுக்கு பின், தங்கள் முந்தைய ஆலய வடிவிலேயே கி.பி. 2002ல் முழுமையாக புதுப்பித்துக் கட்டப்பட்ட ஆலயத்தை அர்ச்சித்தனர்.

வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த ஆலயம் வடஇத்தாலிக்கு பயணம் செய்வோரை தன்னத்தே ஈர்த்துக் கொண்டேயிருக்கிறது. அத்துடன், பல்லாதியோ என்ற அற்புதமான கலைஞரின் கைவேலைப்பாட்டிற்கு சாட்சியாகவும் அமைந்துள்ளது. அன்னைக்கு அளிக்கப்பட்ட மகிழ்ச்சியான மீட்பு செய்தி இன்றும் நம் வாழ்விலும் உணர வாய்ப்பாக இந்த ஆலயம் அமைந்துள்ளது.

**திருப்பயணம் தொடரும்..........**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
# திருப்பாடல்கள் 61-80



சகோ. எட்மன். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 4 |
| | 5 | | | | | | | 8 | |
| | | 9 | | | | | | | |
| | | | 12 | | | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | X | X | | | | |
| | | | | | | 13 | | | |
| | | 10 | | | | | 11 | | |
| | 6 | | | | | | | 7 | |
| 2 | | | | | | | | | 3 |

வலமிருந்து இடம்

3) தலைமுறைதோறும் உமது _____ எடுத்துரைப்போம்.
4) ஆண்டு முழுவதும் உமது _________ முடிசூட்டுகின்றீர்.
7) கடவுளின் ________ அவர்களுக்கு எதிராக மூண்டெழுந்தது.
8) ஆண்டவரே! எனக்குப் பதில்மொழி தாரும்; உம் ________ நன்மை மிக்கது;
11) மக்களினங்களே! நம் கடவுளைப் போற்றுங்கள்; அவரைப் புகழ்ந்து பாடும் _____ கேட்கச்செய்யுங்கள்.
13) அப்பொழுது உன் ________ இரத்தத்தில் தோய்ப்பாய்; உன் நாய்கள் எதிரிகளிடம் தமக்குரிய பங்கைச் சுவைக்கும்' என்று சொன்னார்.

இடமிருந்து வலம்

1) கடவுளே, என்__________எனக்குக் கற்பித்து வந்தீர்; இனி வரும் நாள்களிலும் உம் வியத்தகு செயல்களை அறிவிப்பேன்.
2) படைகளின் கடவுளே! மீண்டும் வாரும்! விண்ணுலகினின்று கண்ணோக்கிப் பாரும்; இந்தத் _____ ___ மீது பரிவு காட்டும்!





1. அன்பின் இறைவா! என் திரு தந்தை, ஆயர்கள், குருக்கள், இருப்பால் துறவியர், மற்றும் பொது நிலையினர் அனைவரும் கிறிஸ்துவை முன்னிலைப்படுத்தி அன்பும், கட்டுப்பாடும், கொண்ட உள்ளத்தை உருவாக்க வல்லமையும், ஆற்றலும், தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பின் இறைவா! திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவ வாழ்வை ஏற்றுக் கொண்டு இருக்கின்ற நாங்கள் என்னில்லா துன்பங்களின் நடுவே, எதிர்ப்புகளின் நடுவே, துணிவோடு இருந்து உமது வார்த்தையை வாழ்வாக்க வரம் புரிய வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. "நற்செய்தி அறிவிப்பவர்களின் பாதங்கள் எத்துணை அழகானது" என்று கூறிய அன்பு இறைவா! இன்று உமது வார்த்தையை எடுத்துரைக்கும் ஒவ்வொரு பணியாளர்களையும் நீர் ஆசீர்வதியும். அவர்கள் எடுத்துரைக்கும் ஒவ்வொரு வார்த்தையும் தூண்டுதலும், வல்லமையும், புத்திரும், நம்பிக்கையும் தந்து வழிநடத்த வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. என்றும் வாழும் அன்புத் தந்தையே இறைவா! குடும்பங்களில் பணியாளராக பணிபுரிகின்ற குடும்பப் பெண்களை ஆசீர்வதிக்கும் தங்களுடைய வாழ்வில் வரக்கூடிய துன்பங்களை கண்டு ஒதுங்கி விடாமல் நம்பிக்கையோடு குடும்பத்தில் ஒளி வீசிட உமது அருளை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## நன்றி

**கடந்த மூன்று வருடங்களாக ஆகட்டும் இதழில் ஞாயிறு துணைவன் வாயிலாக, ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க உதவிய அருள்பணி ஆனந்த் ம.ஊ.ச அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறோம். அவருடைய இறைப்பணி மேலும் சிறக்க நம்முடைய ஜெபங்களையும் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிகொள்வோம்.**

துன்பங்களிலிருந்து முழுமையாக விடுதலை பெற்று, மகிழ்வோடு வாழ ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 27 ஆம் ஞாயிறு (05.09.2025)**

இறையேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே! இன்று நாம் பொதுக்காலம் 27ஆம் ஞாயிற்றுக்கிழமைக்குரிய திருவழிபாட்டை சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆண்டவர் மீது நம் நம்பிக்கையை அதிகப்படுத்த அழைப்புவிடுக்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் அபகூக் தானும் தன் இனத்தாரும் படுகின்ற துன்பங்களை கண்டு புலம்புகிறார். கடவுளுடைய பதில் காலம் தாழ்த்தி வருவதாக தோன்றலாம். நீ காத்திரு, எதிர்பார்த்து இரு, ஆனால் அது நிச்சயம் நிறைவேறியே தீரும். நேர்மை உடையவர் ரத்த நம்பிக்கையால் வாழ்வடைவார் (அபகூக்கு 2:2-4). கடவுளின் மீது வைக்கும் நம்பிக்கை கடுகளவு சிறிதாக இருந்தாலும் அது பெரிய அளவு மாற்றங்களை தரும். ஆண்டவர் நல்லதை எல்லாம் நம் வாழ்வில் நடக்கச் செய்வார், கெட்டதாகவே இருந்தாலும் முடிவில் நல்லதாகவே நடக்கும் என்று நம்புவோம். ஆண்டவர் தரும் மீட்பை பற்றி அக்கறையின்றி இருந்தால் தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது என்பதை உணர்வோம். ஆண்டவர் நமக்கு கொடுத்த தைரியத்தையும், கட்டுப்பாடான உள்ளத்தையும் வைத்து நம் வாழ்க்கையை நிறைவு படுத்திக் கொள்ளவும், ஆண்டவர் மீது நம்பிக்கையை அதிகப்படுத்தவும் வேண்டி இத்திருப்பலியில் மற்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை: (அபகூக்: 1:2-3, 2:2-4)**

அநீதிக்கு எதிராக இறைவாக்கினர் கடவுளிடம் முறையிடுகின்றார். “கொடுமைகளையும் கொள்ளையையும் வன்முறையையும் எத்தனை நாட்கள் பார்ப்பேன்” என்று கூறும் போது, கடவுள் அவரிடம், ‘காத்திடு நம்பிக்கை கொள்வோர் வாழ்வடைவர்’ என கூறும் ஆறுதல் வார்த்தைக்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை: (2 திமொ:1: 6-8,13-14)**

புனித பவுல் தம் உடன் உழைப்பாளரான திமோத்திக்கு ஆறுதல் வார்த்தைகளை கூறுகிறார். கடவுள் அவரது பணியாளர்களுக்கு வல்லமையையும் அன்பு காட்டும் உள்ளத்தையும், மன உறுதியுடன் செயல்படும் ஆற்றலையும் தந்திருக்கிறார். எனவே தொடர்ந்து இயேசுவுக்கு சான்று பகிர்ந்து வாழ வேண்டும் எனக் கூறும் இவ்வார்த்தைகளுக்கு கவனமுடன் செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**





5) கடவுள் தங்கள் கற்பாறை என்பதையும் உன்னதரான ________ தங்கள் மீட்பர் என்பதையும் அவர்கள் நினைவிலி கொண்டனர்.
6) அவர் முன்னிலையில் உங்கள் உள்ளத்தில் உள்ளதைத் திறந்து கொட்டுங்கள்; கடவுளே நமக்கு __________.
9) _________ ஆண்டவரில் அகமகிழ்வர்; அவரிடம் அடைக்கலம் புகுவர்; நேரிய உள்ளத்தோர் அவரைப் போற்றிடுவர்.
10) மன்றாட்டகளைக் கேட்கின்றவரே! ______ யாவரும் உம்மிடம் வருவர். எங்கள் பாவங்களின் பளுவை எங்களால் தாங்கமுடிவதில்லை;
12) ________ தன் பலனை ஈந்தது; கடவுள், நம் கடவுள் நமக்கு ஆசி வழங்கினார்.

**மேலிருந்து கீழ்**

1) வறியோர்க்கும் ஏழைகட்கும் அவர் ________ காட்டுவார்; ஏழைகளின் உயிரைக் காப்பாற்றுவார்.
2) தம்மை நோக்கி மன்றாடும் ஏழைகளையும் ________ எளியோரையும் அவர் விடுவிப்பார்.
4) உண்மையாகவே, இஸ்ரயேலர்க்குக் கடவுள் எவ்வளவு நல்லவர்! தூய உள்ளத்தினர்க்கு ஆண்டவர் எவ்வளவோ ________!
11) ஆண்டவரே! உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்; ________ நான் வெட்கமுற விடாதேயும்.

**கீழிருந்து மேல்**

3) கடவுளே! எங்களை ஆய்ந்து, வெள்ளியைப் புடமிடுவதுபோல் ________;
6) எளியேன் சிறுமைப்பட்டவன்; காயமுற்றவன்; கடவுளே! நீ ________ ______ எனக்குப் பாதுகாப்பாய் இருப்பதாக!
7) தனித்திருப்போர்க்குக் கடவுள் உறைவிடம் அமைத்துத் தருகின்றார்; ________ விடுதலை வாழ்வுக்கு அழைத்துச் செல்கின்றார்;
10) அவரது பெயரின் ________ புகழ்ந்து பாடுங்கள்; அவரது புகழை மேன்மைப்படுத்துங்கள்.
13) ஒருவரைக் கொல்லவேண்டுமென்று நீங்கள் அனைவரும் எவ்வளவு ______ வெறியுடன் தாக்குவீர்? நீங்கள் எல்லாரும் இடிந்த மதிலுக்கும் சிதைந்த வேலிக்கும் ஒப்பாவீர்.

விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-09-2025

# மரியாவின் பாடல் 27



கலைச்சுடர் முனைவர். ஜோ. வின்னரசன், மேல்வழி

<u>பெட்டகம் ஒன்று பூமிக்கு வந்தது</u>

பெட்டகம் ஒன்று பூமிக்கு வந்தது
பெண்ணின் வடிவமாய சாமிக்கு நின்றது
மாசு படாமலே மாமிசம பூண்டது
பேசும் பொருளாக இன்றுமே உள்ளது

தேவ வார்த்தையால் தூது பெற்றது
தேவ மைந்தனையே மாது ஏற்றது
கன்னிமை கெடாது கரு உற்றது
கண்ணியம் விடாது திரு காத்தது

தன்னையே முழுவதும் அர்ப்பணம் செய்தது
தன்னலம் இல்லாத பொற்குணம் எய்தது
இறைத் திருவுளம் பிறழாது நின்றது
திருக் குடும்பமே திரியாது கண்டது

நல்ல செய்கைகளை கருமமாய் புரிந்தது
வல்ல சேயிடம் கருணையே மொழிந்தது
பாவ செயல்களை அறவே ஒழித்தது
பாசக் கயிற்றினால் உறவை வளர்த்தது

இன்ப வெள்ளத்தில் மூழ்காமல் சென்றது
துன்பக் கிண்ணத்தை துவளாமல் வென்றது
பள்ளம் மேடுகளில் உலாவி நடந்தது
பாதாள கேடுகளை உதறிக் கடந்தது

கடவுளின் தாயென்ற அகந்தை ஒழித்தது
கடவுளின் எதிர்நின்ற அலகையை மிதித்தது
ஆகட்டும் என்றே அடித்தாள் பணிந்தது
பாராட்டும் படியே அவனியில் திகழ்ந்தது

நேச மக்களை இயேசுவிடம் சேர்க்குது
நாச பிசாசிடம் இசையாமல் காக்குது
உள்ளம் உடைந்தோர்க்கு உறுதுணை புரியுது
வெள்ளம் மிகுதியென அருளினை பொழியுது

மன்றாடும் யாவருக்கும் பரிந்துரைப் பேசுது
திண்டாடும் எவர்க்குமே கரத்தினை நீட்டுது
அன்றாடம் வாழ்வில் அருகிலே இருக்குது
கொண்டாடும் நமக்கு அருளினை சுரக்குது





புறக்கணிப்பார் என்றும் எச்சரிக்கும் வாசகங்களை கேட்டு திருப்பலியில் இயேசுவின் அன்பு பிள்ளைகளாக வாழ மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை: (ஆமோ: 6:1,3-7)**

ஆமோஸ் இறைவாக்கினர் இஸ்ரேல் மக்களிடையே உள்ள தீமையை கண்டு சினம் கொள்கிறார். வலியோரை வாழ்த்தி, ஏழை எளியோரை வாட்டும் அநீதியும் பொய்யும் நிறைந்த சமுதாயமாக மாறிவிட்டதால் கடவுளின் சின்னத்திற்கு ஆளாகி விட்டீர்கள், எனவே உங்களுக்கு “ஐயோ கேடு”. அதிலிருந்து மீண்டு வந்து நீதியையும் நேர்மையும் வளர்த்துக் கொள்ளுங்கள் என அறிவுரை கூறும் முதல் வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசகம் முன்னுரை : (1திமோ 6:11-16)**

புனித பவுல் விசுவாச வாழ்வு என்னும் போராட்டத்தில் ஈடுபட்டு, நிலை வாழ்வை நமதாக்கிக்கொள்ள, இவ்வுலக ஆசைகளில் இருந்து விடுபட்டு நீதி, பணிவு, இறைப்பற்று ஆகிய பண்புகளை நாடி தேடி வாழ்ந்து, இறைவனுக்கு பிரியமான வாழ்வாக நம் வாழ்வு அமைய நம்மை அழைக்கின்றார். இவ்வார்த்தைக்கு கவனமுடன் செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பே உருவான இறைவா! உன் திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், மற்றும் பொது நிலையினர் அனைவரும் ஏழைகள் பால் அதிக அக்கறையுடனும், அன்புடனும், வழி நடக்க உமது ஆசீரை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. ஞானத்தின் பிறப்பிடமே என் இறைவா! நாங்கள் அனைவரும் இவ்வுலகில் வாழ்கின்ற இந்த சமுதாயத்தில் ஏழைகளை ஒதுக்குவது, ஓரங்கட்டுவது, கண்டுகொள்ளாமல் இருப்பது, போன்றவை கனமான பாவம் என்பதை உணராமல் இருந்து வாழ்கின்றோம். இத்தகைய நிலையிலிருந்து மாறி உமது மதிப்பீடுகளை வாழ்வாக்க அருள் புரிய வேண்டும் என்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா! உலகெங்கும் நடைபெறும் போர்கள் நீங்கவும், உலக நாடுகள் மத்தியில் அமைதி நிலவும், அடிமைகள் சிறைப்பட்டோர் விடுதலை பெறவும், அனைத்து மக்களும் தங்கள் வாழ்வில் முன்னேற்றம் அடையவும், அருள் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. வழிநடத்தும் அன்பு இறைவா! தொல்லையின்றி அமைதியோடு வாழ, நாட்டு தலைவர்களுக்காகவும், உயர் நிலையில் உள்ள எல்லா மனிதர்களுக்காகவும், வேண்டுகின்றோம். இவர்களுக்கு ஏற்படுகின்ற

மக்களை மீட்டெடுத்து அன்பின் பாதையில் வழிநடத்த உமது ஆற்றலை தந்து உதவுமாறு இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பு இறைவா! உழைக்க மனம் இல்லாதவன் உண்ணலாகாது என்ற இறை வார்த்தைக்கு ஏற்ப, நாங்கள் அனைவரும் நேர்மையாக இருந்து, கடினமாக உழைத்து, அதிக பலனை பெற இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. செல்வம் எங்கே இருக்கின்றதோ அங்கேதான் உங்கள் உள்ளமும் இருக்கும் என்று சொன்ன பரலோக பிதாவே! செல்வத்திற்கு அடிமையாக இருக்கும் மக்கள் எது உண்மையான செல்வம் என்பதை அறிந்து செயல்படுவதற்கு, உமது ஞானத்தின் ஒளியை தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா! மாற்றம் ஒன்றே மாறாதது என்பதை உள்ளூர நம்பி, வாழ்க்கையில் நிகழும் அனைத்து மாற்றங்களையும் ஏற்றுக் கொண்டு, நாங்களும் சிறந்த பொறுப்புள்ள மனிதர்களாக மாறி, நல்ல கிறிஸ்தவர்களாக வாழ, துணை புரிய வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 26 ஆம் ஞாயிறு (28.08.2025)**

இறையேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே! இன்று நாம் பொதுக்காலத்தின் 26 ஆம் ஞாயிற்றுக்கிழமைக்குரிய திருவழிபாட்டை சிறப்பித்துக் கொண்டிருக்கின்றோம். இன்றைய வாசகங்கள் நாம் பிற இனத்தாரை போல் வாழாமல், குணநலங்களில் கிறிஸ்துவ மக்களாக, அவருடைய சீடர்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். இன்றைய நற்செய்தியில் வரும் பணக்காரனும் லாசரும் பற்றிய உவமை நற்செய்தியாளர் லூக்கா மட்டுமே குறிப்பிடுவதாகும். "லாசர்" என்னும் சொல்லுக்கு "இறைவன் உதவுவார்" என்பது பொருள். இவ்வுலகில் ஒன்றுமில்லாதவர்கள் இறைவனை அடைக்கலமாக கொண்டு வாழ்கின்றார்கள். உன் சகோதரனுக்கும், உன் நாட்டில் உள்ள வறியவருக்கும், தேவையில் உள்ளோருக்கும் உன் கையை தாராளமாக திற என்கிறார் ஆண்டவர் எசாயா:15:11 உலகத்தின் செல்வத்திற்கும் மகிழ்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் ஆண்டவரின் ஆட்சிக்கு முக்கியத்துவம் கொடுங்கள். இயேசுவை மக்கள் தொடுவதன் மூலம் அவர்களின் நோய் நீங்கி குணம் பெற்றார்கள் என்றும் ஏழைகள் பசியுள்ளவர்கள் அழுபவர்கள் துன்புறுத்தப்படுகிறவர்கள் ஆசிர்வாதங்களை பெறுவார்கள் என்றும் செழிப்புள்ளவர்கள் அதாவது உலக வாழ்வில் அதிக நாட்டம் கொண்டவர்களை கடவுள்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஜான் பால் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்



**பொதுக்காலம் 24ம் ஞாயிறு (14.09.2025)**

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! இன்று பொது காலத்தில் 24 ஆம் ஞாயிற்றுக்கிழமைக்குரிய திருவழிபாட்டை நாம் சிறப்பித்துக் கொண்டிருக்கின்றோம். இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆண்டவருடைய பேரின்பத்தையும், மீட்பையும் பற்றி நமக்கு தெளிவு படுத்துகிறது. மக்களை அழிப்பது அவர் நோக்கம் அல்ல, மாறாக அவர்களை தண்டித்து புது உலகாய் மாற்றுவதே அவர் நோக்கம். கடுமையான போராட்டம் வந்தாலும் அவரை புறம் தள்ளாமல் இருந்தால் நம்மை காப்பாற்றுவார். இன்று திருச்சிலுவை மகிமையை கொண்டாடுகின்றோம். திருச்சிலுவை பலருடைய வாழ்விற்கு மீட்பை, விடுதலையை, மகிழ்ச்சியை பெற்று தருகிறது. தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அழித்தும் அளவிற்கு கடவுள் உலகின் மீது அன்பு கொண்டார் (யோவான் 3:16). அந்த கடவுள் மீட்பையும் தந்தார். பாம்பினால் இறந்தவர்களை பாம்பினால் உயிர்த்தெழ செய்த இறைவன், மரத்தால் வந்த சாபத்தை சிலுவை மரத்தாலே நீக்கினார். இச்சிலுவை மாண்பை போற்றி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**முதல் வாசக முன்னுரை:- (எண்: 21:4-9)**

பாலைவனப் பயணத்தின் போது மக்கள் கடவுளுக்கும், மோசேயுக்கும் எதிராக முறையிட்டார்கள். அதன் விளைவாக அவர்கள் தண்டனையை அனுபவித்தார்கள். ஆனால் அவர்கள் மனந்திரும்பி ஆண்டவரை நாடியபோது, கருணை மிக்க தேவன் செங்காச்சியை உயர்த்தச் செய்து, அதை நோக்கும் அனைவருக்கும் விடுதலை வாழ்வை அளித்தார். சிலுவையில் உயர்த்தப்படவிருந்த கிறிஸ்துவின் மூலம் கிடைக்கும் உன்னத மீட்ப்பை முன்கூட்டியே சுட்டிக்காட்டுகிற இவ்வாசகத்திற்கு நன்றியுணர்வோடு நம் மனதை திறப்போம்.

**இரண்டாம் வாசகம்: (பிலி: 2:6-11)**

திருத்தூதர் பவுல் பலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது இரண்டாம் வாசகம். இயேசு கிறிஸ்து தன்னைத் தாழ்த்திக் கொண்டு அடிமையின் வடிவை ஏற்றுக்கொண்டார். அவர் கீழ்ப்படிந்து, சிலுவை மரணம் வரை சென்றார். அதனால், கடவுள் அவரை உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அதாவது எல்லோருக்கும் ஆண்டவராக உயர்த்தி வைத்தார். சிலுவையின் பணிவு, தியாகம், இரட்சிப்பு ஆகியவற்றை நம் வாழ்வில் சிந்திக்க அழைக்கிற இவ்வாசகத்திற்கு செவ்வனே செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. அன்பின் இறைவா! என் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார், மற்றும் பொது நிலையினர் அனைவரும் தங்களின் செயல்பாடுகள் வழியாக கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்தும் கருவியாக இருந்து செயல்பட அருளை தர வேண்டும் என்று இறைவா உண்மை மன்றாடுகின்றோம்.

2. திருச்சிலுவையின் வழியாக ஆசீரை பெற்று தரும் எம் இறைவா! உமது சிலுவையின் வழியாக கிடைக்கக்கூடிய அனைத்து ஆசீரையும் பெற்று, எங்களிடம் உறவாடுகின்ற உள்ளங்களுக்கு ஆசிரை தருபவர்களாக நாங்கள் வாழ, உமது மனநிலையை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நம்பிக்கையின் நாயகரே என் இறைவா! இன்று வறுமையில் தவிப்போர், பல்வேறு சோதனைகளால் நிம்மதியை இழந்து, நம்பிக்கையை இழந்து இருக்கும் உமது பிள்ளைகளை ஆசீர்வதித்து, ஆழமான விசுவாசத்தோடு வாழ உன் அருளை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா திருச்சிலுவையின் விழாவினை கொண்டாடும் நிறுவனங்கள், சபைகள், அதில் பணிபுரிவோர் அனைவரையும் உமது அருட்கொடையினால் ஆசீர்வதித்து தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புகளை திறம்பட செய்து இவ்வுலகத்தில் கிறிஸ்துவின் சாட்சிகளாக செயல்பட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### பொதுக்காலம் 25ஆம் ஞாயிறு (21.09.2025)

இறையேசுவில் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே! இன்று நாம் பொதுக்காலம் 25ஆம் ஞாயிற்றுக்கிழமைக்குரிய திருவழிபாட்டை சிறப்பித்துக் கொண்டிருக்கின்றோம். செல்வத்தின் மட்டில் நாம் விழிப்பாக இருக்கவும், அழியக்கூடிய செல்வத்தின் மேல் நம்பிக்கை வைக்காமல் அழியாமல் நிலை வாழ்வு தருகின்ற இயேசு கிறிஸ்துவின் மீது முழுமையான நம்பிக்கை வைக்க இன்றைய வாசகங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. நற்செய்தி வாசகத்தில் நேர்மையற்ற செல்வமாக இங்கு குறிப்பிடபடுவது இவ்வுலக வாழ்க்கையே. அப்படியானால் செல்வராக நம் ஆண்டவரையும், நேர்மையற்ற பொறுப்பாளராக நம்மையும் வைத்துக்கொண்டு, இயேசு சொல்ல வருவதை இவ்வாறு ஒப்பிட்டுப் பார்ப்போம். நேர்மையற்ற செல்வமாகிய இவ்வாழ்க்கையை கொண்டு நாம் பிறருக்கு எந்த அளவுக்கு உதவிகளை செய்ய முடியுமோ, அன்பை தர முடியுமோ, அடுத்தவருக்காக ஜெபிக்க முடியுமோ, அனைத்தையும் செய்து நிலையான உறைவிடமான விண்ணரசில் இடம் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனையோடு, நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சிறிய சிறிய பொறுப்புகளில் கருத்தாய் இருந்து, கடவுள் தன் மகன் வழியாக நமக்கு வழங்கிய மீட்பில் முழுமையாக பங்கு பெற இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**முதல் வாசகம் முன்னுரை: (ஆமோ: 8:4-7)**

இன்றைய முதல் வாசகமானது ஆமோஸ் இறைவாக்கினர் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஏழைகளைக் காலால் மிதித்து, வணிகத்தில் வஞ்சகம் செய்பவர்களைத் இறைவாக்கினர் கடுமையாக கண்டிக்கிறார். "உங்களுடைய அநியாயங்களை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன்." என்ற கடவுளுடைய செய்தியை உரக்க உரைக்கிறார். எப்போதும் நீதியிலும் கருணையிலும் நடந்து, ஏழைகளுக்கு அன்பும் மரியாதையும் காட்ட வேண்டியதை நினைவூட்டுகின்ற இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசகம் முன்னுரை: (திமோ: 2:1-8)**

திருத்தூதர், பவுல் எல்லோருக்காகவும், குறிப்பாக ஆட்சியாளர்களுக்காக இடையறாது வேண்டும் படி நம்மை அழைக்கிறார். ஏனெனில், கடவுளைய சித்தம் எல்லோரும் மீட்ப்படைய வேண்டும் என்பதும், இயேசு கிறிஸ்துவின் மூலம் உண்மையை அறிதலும் ஆகும் என்பதையும், நம் வாழ்வில் நாம் கடைபிடிக்க வேண்டிய செபம், அமைதி, நீதியான நடத்தை என்பவற்றின் அவசியத்தை வலியுறுத்துகிறது. இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

**மன்றாட்டுகள்**

1. எங்களை மீட்கின்ற அன்பு இறைவா! மக்களை மீட்கின்ற பொறுப்பை கொடுத்து சிறப்பாக செய்து கொண்டிருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவரத்தார், பொது நிலையினர் அனைவரும் உமது அடிச்சுவட்டை பின்பற்றி, உம்மைப்போல் ஓரம் கட்டப்பட்ட ஒதுக்கப்பட்ட